79வது சுதந்திர தினம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிய விருதுகள்!

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், மகளிர் நலனுக்காக பணியாற்றிய சிறந்த சமூக சேவகருக்கான விருதினை திருமதி பாகீரதி ராமமூர்த்தி அவர்களுக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், கட்டட வரைபட அனுமதிகளை எளிதாக்கியதற்காக முதலமைச்சரின் நல் ஆளுமை விருதினை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, நகர் ஊரமைப்பு இயக்குநர் பா. கணேசன், ஆகியோருக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் நலத்திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தியதற்காக முதலமைச்சரின் நல் ஆளுமை விருதினை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதி திராவிடர் நல ஆணையர் த. ஆனந்த், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் ச. அண்ணாதுரை ஆகியோருக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், கன்னியாகுமரி மாவட்டத்தில், விவேகானந்தர் பாறை நினைவிடம் மற்றும் திருவள்ளுவர் சிலையை இணைக்கும் கண்ணாடிப் பாலம் அமைத்து, சுற்றுலா துறையை மேம்படுத்தியதற்காக முதலமைச்சரின் நல் ஆளுமை விருதினை நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ் அவர்களுக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் விழாவில், சமுதாய பங்கேற்பு மூலம் மாற்றத்தைக் கொண்டுவரும் ஊரக மேம்பாட்டு முயற்சிகளுக்காக முதலமைச்சரின் நல் ஆளுமை விருதினை உதவி காவல் கண்காணிப்பாளர் மரு. வி. பிரசதிரு. ப. பாலகிருன்ன குமார், வட்டாட்சியர் பாலகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி வீ.யமுனா ஆகியோருக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளார்.

எந்த சுதந்திர நாட்டிலாவது 'பிறவி பேதம்' - ஜாதி உண்டா? சுடுகாட்டிலும் பேதம் உள்ள நிலையில், சுதந்திரம் எங்கே?

தீண்டாமை - ஜாதி ஒழிந்து சமத்துவம் நிலவும்போதுதான் 'உண்மையான சுதந்திரம்' விடியும்?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.16-

பிறப்பின் அடிப்படையில் பேதம் நிலவும் ஒரு நாட்டில், உண்மையான சுதந்திரம் என்று கூறி, எப்படிக் கொண்டாடுவது? சமூக நீதி, சமத்துவம் என்ற நிலை உருவாகும்போது தான் உண்மையான சுதந்திரம் - கொண்டாட்டம் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

எந்த நாட்டிலாவது பிறப்பின் அடிப்படையில் பஞ்சமன், சூத்திரன் உண்டா?

இன்று (ஆகஸ்ட் 15) 'சுதந்திர நாள்', 79 ஆவது 'விடுதலை நாள்' என்று கொண்டாடப்படுகிறது- அரசுகளால் - ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால்; ஆனால், உண்மையில் குடிமக்கள் அனைவரும் - மற்ற பல நாடுகளிலும் மகிழ்ச்சியுடனும், மன நிறைவுடனும் கொண்டாடும் மன நிலையில் இருக்கிறார்களா? என்பது முதற்கேள்வி.

உலகில் 'சுதந்திரம்' பெற்ற எந்த நாட்டிலாவது மனிதர்களை இழிவுபடுத்தி, "பஞ்சமன்", "சூத்திரன்", "தொடக்கூடியவர்கள் - தொடக்கூடாதவர்கள்'' (Untouchables), "நெருங்கக் கூடியவர்கள் - நெருங்கக் கூடாதவர்கள்" (Un approachables) "மேல்ஜாதி என்பவர்கள், கண்ணால் பார்க்கக் கூடாத ஜாதியினர்" (Unseeables) என்ற மக்களை பிறவி அடிப்படையில் (அவர்களது அறிவு, ஆற்றல், உழைப்பு காரணமாக அளவீடு செய்து பார்க்காமல்) மதவெறி, வருணம், ஜாதி, குலம், செய்தொழில் -

இவற்றின் அடிப்படையிலே பிரித்து, வேற்றுமைப்படுத்திப் பார்க்கும் நிலை உண்டா? வேதனையும், வெட்கமும் படவேண்டிய நிலையில் வேறு எந்த அடிமை நாடுகள்கூட இன்று பூமிப் பந்தில் உள்ளதா இந்தப் 'புண்ணிய, புனித, பாரத' ஞானபூமி என்று தம்பட்டம் அடிக்கும் நம் நாட்டைத் தவிர!

சுடுகாட்டிலும், இடுகாட்டிலும் கூட பேதம் என்ற அவலம்!

செத்த பிறகு புதைக்கும் இடுகாட்டிலும், எரிக்கும் சுடுகாட்டிலும்கூட - சாவில்கூட மயானத்தில்கூட ''மனிதத்தைத்" தொலைத்துவிட்டு, ஜாதி ஆணவம், பெருமைப் பேசி, வெறிபிடித்து அலையும் கொடுமையைக் காணுவது 79 ஆவது சுதந்திர ஆண்டிலும் தொடரலாமா?

தீண்டாமை ஒழிப்பு, சமத்துவம், சுதந்திரம் எல்லாம் வெறும் 'ஏட்டுச் சுரைக்காயாக' அரசியல் சட்ட உறுதி மொழிகளாயினும், வெறும் சடங்காச்சாரமாக புழுக்கத்தில் உலாவருகிறது!

நெஞ்சில் கை வைத்து - மனச்சான்று பேசுபவர்களால் கூட உண்மைகளை, யதார்த்தத்தை ஏன் ஒப்புக்கொள்ள முடியவில்லை?

சமத்துவம் அடைய, சரி நிகர் நிலை பெற, சமூகநீதிக்கு மட்டும் ஜாதிக் குறிப்பு நோய்த் தடுப்பு மருந்தில் மிகச் சிறு விஷம் (Poison) சேர்ப்பது போல், தேவைப்படும் நிலையைக்கூட புரிந்துகொள்ளாமல், அதையே உணவாக்கி, ஜாதி வெறியை தங்களது தனி வாழ்வு - விளம்பர வெளிச்சம், தகுதி இல்லாத நிலையிலும், தலைமைப் பிம்பம் இவற்றைக் கட்டி, ஆரிய நரிகள் நாட்டாண்மைக்குக் "கூலிப்படையாக", தங்களையும், தாங்கள் கொள்கையான சமூகநீதியையும்கூட, அதன் எதிரிகளிடையே விற்றுப் பிழைக்கும் வெட்கக் கேடான நிலைதானே இன்றும் உள்ளது!

எல்லாவற்றிலும் பேதா பேதம் - இந்த நிலையில் சுதந்திரத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாட முடிகிறதா?

"உள்ளொன்று வைத்துப் புறமொன்றுப் பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்" என்றார் வள்ளலார்.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்றும், "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்'', "மெய்ப்பொருள் காண்க" என்றெல்லாம் அறிவுரை கூறினார் திருவள்ளுவர்.

ஜாதி, பெண்ணடிமையை, மூடநம்பிக்கைகளை ஒழித்த பகுத்தறிவு வாழ்க்கை வாழச் சொன்ன புத்தியில், 'புத்தரான' சித்தார்த்தன் - இவர்கள் எல்லாம் இன்று இருந்தால், நம் சமூக, பிறவி இழிவு அவமானம்பற்றி நேரில் கண்டால், இதைச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் பொங்கும் 'விடுதலை நாள்' என்று கொண்டாடுவார்களா? அல்லது துன்பமும், துயரமும் அடைவார்களா?

பொது நிலையில், விருப்பு வெறுப்பு அற்ற நிலையில், மனிதநேயம் - மானிட உரிமைகள் கண்ணோட்டத்தில் இன்று நம்மால் மகிழ்ச்சியில், "ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே" என்று பாடும் நிலை உள்ளதா?

அரசியல் சட்டம் மீது எடுக்கப்பட்ட பிரமாண உறுதிமொழிகள், உண்மையில் செயல்படும் செம்மை நிலை உண்டா?

தந்தை பெரியாரின் தொலைநோக்குதானே வெற்றி பெற்றுள்ளது.

"முதியவர் சொல்லும் முதுநெல்லிக்கனியும் முன்னே கசந்து, பின்னே இனிக்கும்" என்பது எவ்வளவு அனுபவ உண்மை பார்த்தீர்களா?

உண்மைச் சுதந்திரம் எப்போது?

இந்த மதவெறி, ஜாதி வெறிக்கு நாமே விடை காண வேண்டும். ஆணவக் கொலைகளும், ஆணவ ஜன நாயகப் படுகொலைகளும், ஆதிக்க ஜனநாயக அவலங்களும், அடாவடித்தன அரசியல் நாடகங்களும்தான் ''தோரணங்களாகத்'' தொங்கவிடப்பட்டு நடத்தும் விசித்திர விழா நிலைதான் மிச்சம்!

என்று இந்த ஜாதி- தீண்டாமை ஒழிகிறதோ, அன்று தான் உண்மைச் சுதந்திரம் விடியும் நிலை என்பதே சமூக நீதி, சமத்துவப் போராளிகளின் வேட்கையும், விழைவும்! அந்த இலக்கு நோக்கியே நமது தீராப் பயணம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடந்தது அம்பலமாகியுள்ளதால்

பா.ஜ.க. கூட்டணியில் இருப்பவர்கள் மாற வாய்ப்புள்ளது!

நெல்லையில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, ஆக.16-

வாக்காளர் பட்டியல் முறைகேடு நடந்துள்ளது அம்பலமாகி உள்ளதால் ஒன்றிய அரசையும் பிரதமரையும் நீக்கி விட்டு பாராளுமன்றத்திற்கு நீதிமன்ற தலையீட்டில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் தமிழகத்தில் இனி அந்த யுக்தியை பயன்படுத்த முடியாது என்பதால் பா.ஜ.க.கூட்டணியில் இருப்பவர்கள் மாற வாய்ப்புள்ளதாக நெல்லையில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் நெல்லை பாளையங்கோட்டையில் உள்ள அண்ணா விளையாட்டு அரங்கில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள பாரா விளையாட்டு அரங்கத்தினை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, பங்கேற்று விளையாட்டு அரங்கத்தை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தனர்.

பின்னர் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டியின் போது செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் தங்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது. நாங்கள் சுயசார்பு உள்ள அமைப்பு என குறிப்பிட்டுள்ளது. அதிகமாக வாக்காளர்களை வைத்து பிரதமர் முதல் உள்ளாட்சி பிரதிநிதிகள் வரை தேர்ந்தெடுப்பதற்

காக மிகச் சிறப்பான முறையில் ஜனநாயக முறைப்படி தேர்தல்கள் நடைபெற்று வந்தது. ஆனால் கடந்த தேர்தலில் அது சீர்குலைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் சரியான தீர்ப்பு!

உயிரிழந்ததாக வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட ஏழு நபர்களோடு பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தேநீர் அருந்தினார். அநியாயமான முறையில் வாக்காளர் பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையம் வாக்காளர்களை நீக்கி உள்ளது. வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டவர்கள் விவகாரத்தில் நடந்த மோசடி குறித்து நீதிமன்றம் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளது. பிரதமர் வெற்றி பெற்ற வாரணாசி தொகுதியில் கூட வாக்காளர்கள் பட்டியலில் குளறுபடி ஏற்பட்டுள்ளது என்ற தகவலும் வெளியே வருகிறது. நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் தவறுகள் நடப்பதற்கு காரணம் தேர்தல் ஆணையரை தேர்ந்தெடுக்கும் முறையில் மாற்றம் செய்ததுதான்.

எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், உச்ச நீதிமன்ற நீதி அரசர் போன்றோர் அடங்கிய குழு தேர்தல் ஆணையர் யார் என்பதை முடிவு செய்ய ஐந்தாறு நபர்களை தேர்ந்தெடுத்து அதில் ஒருவரை தேர்தல் ஆணையராக நியமிப்பார்கள். ஆனால் அந்த முறையை மாற்றி பிரதமர் அவருக்கு கையடக்கமான ஒரு அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அடங்கிய குழு மூலம் தேர்தல் ஆணையர் தேர்ந்தெடுக்கும் பணி இப்போது நடந்து வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் கொள்கையில் மாற்றம் இருந்தாலும் கூட பிரதமரும் அவரது கையடக்க அமைச்சரும் சேர்ந்து தேர்தல் ஆணையரை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற நடைமுறை இருந்து வருகிறது. இந்த நடைமுறையை உச்சநீதிமன்றம் ஏற்கனவே கண்டித்தது. ஆனால் அது அப்படியே அமுங்கி விட்டது.

புதிய நடைமுறையில் பிரதமர் மற்றும் அவரது கையடக்க அமைச்சரால் தேர்தல் ஆணையர் தேர்ந்தெடுக் கப்படுவதால் அவர் பி.ஜே.பி.தேர்தல் ஆணையராகவே செயல்படுகிறார். பிரதமரும் அவரது அமைச்சரும் சொல்லும் வேலையெல்லாம் தேர்தல் ஆணையர் செய்து வருகிறார். நாடு முழுவதும் தேர்தலின் போது வாக்குப்பதிவு இயந்திரங்களில் வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்த ஐந்து மணிக்கு பின்னர் பிரதமரின் ஒப்புதலோடு எந்தெந்த தொகுதியில் எத்தனை வாக்குகள் பதிவேற்ற வேண்டும் என கம்ப்யூட்டர் மூலம் பட்டியலை வைத்துக்கொண்டு வாக்குகளை தேர்தல் ஆணையம் சேர்த்து விடுகிறது. அப்படி சேர்க்கப்பட்டதால் தான் பீகார் உள்ளிட்ட பல இடங்களில் பலர் வெற்றி பெற்றுள்ளனர்.

தேர்தலில் பல முறைகேடுகள் நடந்த பின்னரும் ஜனநாயக நாடான இந்தியா அமைதியாகவே உள்ளது. தேர்தல் ஆணையத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் மற்றும் மத்திய அரசை நீதிமன்றம் தலையிட்டு நீக்கம் செய்ய வேண்டும். புதிதாக பாராளுமன்றத்திற்கு தேர்தலை நடத்த வேண்டும் அது தான் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு. காங்கிரஸ் ஆட்சியில் தான் வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதில் தான் முறைகேடு என காங்கிரஸ் அமைச்சரையே பா.ஜ.க. சொல்ல வைத்துள்ளது.

தேர்தல் ஆணைய முறைகேட்டால் பா.ஜ.க. வெற்றி!

பா.ஜ.க தேர்தலில் வெற்றி பெற்றது எப்படி என்பது அனைவருக்கும் இப்போது தேர்தல் ஆணைய முறைகேடு மூலம் தெரிந்துவிட்டது. இனி தேர்தல் ஆணையத்தை பயன்படுத்தி வெற்றி பெற முடியாது. அந்த வாய்ப்பு இனி உருவாகாது. தேர்தல் ஆணையத்தை முறைகேடாக பயன்படுத்த முடியாது, இனி வெற்றி பெற முடியாது, என்பதை அறிந்து தமிழகத்தில் பா.ஜ.க கூட்டணியில் இருப்பவர்கள் கூட மாற வாய்ப்புள்ளது. நெல்லை பல்கலை பட்டமளிப்பு விழாவில் தமிழகத்திற்கு எதிராக செயல்படும் ஆளுனரிடம் இருந்து பட்டம் வாங்க மறுத்த மாணவி குறித்த கேள்விக்கு தமிழக பெண்கள் சுயமரியாதையோடும், வீரமாகவும் இருப்பவர்கள் என்றார்.

இவ்வாறு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமை!

சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி சார்பில் கர்ப்பிணிப் பெண்களுக்கு நல உதவிகள்!

முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்குகிறார்!

சென்னை, ஆக.16-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., மாவட்ட மகளிர் தொண்டரணி சார்பில், ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் கலைஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாள் போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி, கர்ப்பிணிப் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை - கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத்தலைவர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்கி சிறப்பிக்கின்றார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., மாவட்ட மகளிர் தொண்டரணி சார்பில் ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாள் போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி கலைஞர் - தாய்மை பெண்மை நலமாகட்டும்! தலைவரின் பெருமையை தாலாட்டட்டும்!! எனும் தலைப்பில் கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் நாளை (17.8.25 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை, எழும்பூர், பயாஸ் மகாலில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி, பெருநகர மேயர் பிரியாராஜன் முன்னிலை வகிக்கின்றனர்.

கோ.ஏகப்பன், வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, கே.எஸ்.எம். நாதன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, சரி தாமகேஷ் எம்.சி, டாக்டர்.ஜி. சாந்தகுமாரி எம்.சி, சுதாதீனதயாளன் எம்.சி, சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், ஜி.வி.நாகவள்ளி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி, பரிதிஇளம்சுருதி எம்.சி, பாத்திமாமுசஃபர் எம்.சி, கே.அண்ணபூரணி, கே.வள்ளி, ஆர்.கிருஷ்ண வேணி, எஸ்.விஜயலஷ்மி, கே.எம்.ஸ்நோபா, ஜெ.தேவகிருபை, எஸ்.ஜான்சிராணி, சகினாபேகம், சூர்யாரகு, அமுல் பாண்டியன், ஜெயசூர்யா, யு.இலக்கியா, எம்.எழில், எஸ். விஜயலட்சுமி, ஏ.நிர்மலாதேவி, ஏ.சுகந்தி, வி.நதியா, ஜி.ஞானதீபம், புனிதாமோகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் - கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத்தலைவர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும், இப்பொதுக்கூட்டத்தில், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.எம்.யாழினி, ப.ரங்கநாதன், பி.கே.மூர்த்தி கே.சந்துரு சி.மகேஷ்குமார் எஸ்.மணிமுடி, வே.உமா காந்த் சங்கரி நாராயண எம். விஜயகுமார் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, தேவஜவஹர், ஜி.மகாதேவன் இசட்ஆசாத் எம்.சி., கூ.பி.ஜெயின், எஸ். முரளி, எஸ்.ராஜசேகர், செ. தமிழ்வேந்தன், எம்.சாமி கண்ணு, வே.வாசு, வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ். பி.ராஜகோபால், எம்.ஆர்.டி. நாகராஜ், புரசை கோ.மணி, க.நந்தீஸ்வரன் மற்றும் கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் சிறப்பித்தனர்.

இப்பொதுக்கூட்டத்தில் இ.மொய்தீன், டால்பின் எஸ். ஹரி நன்றி கூறினார்கள்.

எங்களுக்குத் தந்த திட்டங்களால் நலம்பெறுவோம் என்ற நம்பிக்கை பிறக்கிறது!

தூய்மைப் பணியாளர்களுக்கு நலவாரியத்தை உருவாக்கிய முதல்வருக்கு நன்றி!

சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் மகிழ்வுக் கடிதம்!

சென்னை, ஆக.16-

பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு ஊழியர் தொழிற்சாங்கங்கள் மற்றும் தூய்மை பணியாளர்களின் மகிழ்வுக் கடிதம் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு,

தூய்மை பணியாளர்களான எங்களுக்கு, எங்கள் நலனுக்காக அரசு அறிவித்த புதிய திட்டங்கள் மற்றும் சிறப்பு நடவடிக்கைகளுக்கு மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிறோம். நீங்கள் எங்களுக்கு தந்த திட்டங்களால் நலம் பெறுவோம் என்ற நம்பிக்கை பிறக்கிறது. முத்தாய்ப்பாக தனியாக எங்களுக்கென்று நல வாரியத்தை உருவாக்கியதற்கு, காலம் முழுவதும் நன்றி சொல்வோம்.

* எங்கள் உடல் நலனைக் காக்க தொழில்சார் நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் தனித்திட்டம்.

பணியின் போது உயிரிழக்கும் நிலை ஏற்பட்டால் 10 இலட்சம் ரூபாய் நிதி பாதுகாப்பு.

சுயதொழில் தொடங்குவதற்கான அதிகபட்சம் 3.5 லட்சம் வரை மானிய உதவி மற்றும் குறைந்த வட்டியில் கடன்.

* எங்கள் பிள்ளைகளுக்கு உயர்கல்விக்கான கட்டண உதவி.

* அடுத்த 3 ஆண்டுகளில் 30,000 வீடுகள் வழங்கும் வீட்டு வசதி திட்டம்.

பணியின்போது இலவச காலை உணவு வழங்கும் திட்டம் ஆகியவை எங்கள் வாழ்வாதாரத்தையும், எதிர்கால நலனையும் உறுதி செய்யும் முக்கியமான முன்னெடுப்புகள்.

இந்த திட்டங்கள் எங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் உறுதியுடன், எங்களை மதித்து எங்களுடைய நீண்ட கால கோரிக்கையினை ஏற்று பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்த தங்கள் தலைமையினை மனமார்ந்த நன்றியுடன் பாராட்டுகிறோம்.

விலைவாசி உயர்வுக்கு ஏற்ப மற்ற துறைகளுக்கும் செய்யப்படுவதைப் போல எங்கள் ஊதியத்தையும் காலத்திற்கு ஏற்ப உயர்த்துவதற்கு, தூய்மை பணியாளர்களை தாய்மைப் பணியாளர்கள் என போற்றுகின்ற எங்கள் முதல்வர் உறுதி செய்வார் என்று ஒட்டுமொத்த தமிழக மக்களும் நம்புவதைப் போல் பெருநகர மாநகராட்சியின் தூய்மை பணியாளர்களும் நம்புகின்றோம்.

இவ்வாறு தூய்மைப் பணியாளர்கள் சார்பில் நன்றி நன்றி நன்றி என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.